THE WORLD NEEDS THE WORD
IBT

நவம்பர் 2025
மலர் 24, இதழ் 2

சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

பொய்யுரையாத தேவன்

பொய்யுரையாத தேவன்

பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுப்புத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா? (எண். 23 : 19).

மேலே எழுதப்பட்டுள்ள வசனமானது பிலேயாம் மோவாபியரின் இராஜாவான பாலாக்கை நோக்கி கூறியது. தேவன் யார்? கர்த்தரின் கட்டளை என்ன? தமது ஜனங்களை ஆசீர்வதிக்க வந்தவர். தேவனைப் பற்றிய எந்த ஒரு காரியமும் அறியாத மக்கள் மோவாபியர்கள். லோத்துவிற்கு இரண்டு மகள்கள். தங்கள் தகப்பனால் கர்ப்பவதி-யானவர்கள். மூத்தவள் ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்கு மோவாப் என்று பெயரிட்டாள். அவன் இந்நாள் வரைக்கும் இருக்கிற மோவாபியருக்குத் தகப்பன். எந்த ஒரு மனமாற்றமும் இல்லாத இந்த மோவாபிய ராஜா பாலாக், இஸ்ரவேல் மக்களை வெறுத்து சபிக்குமாறு பிலேயாமிடம் கூறியபோது, பிலேயாம் இவ்வாறாக கூறினான்.

பொய் மனிதனுடைய நாவிலே சர்வ சாதாரணமாக வரக்கூடிய வார்த்தை. பொய் பேசும் நாவு கர்த்தருக்கு அருவருப்பானது. எந்த சூழ்நிலையிலும், எப்பேர்ப்பட்ட நிலைமையிலும் நாம் பொய் பேசக்கூடாது.

ஒரு மனிதனோ / மனுஷியோ தன் வாழ்க்கையில், சொல்லில் பொய் பேசினால் அதன் விளைவு என்னவாக இருக்கும் என்று மற்றவர்கள் சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. காரணம், பொய் பேசின மனிதன், நிம்மதியாகவே இருக்க முடியாது. பொய் மட்டுமல்ல, எந்த ஒரு தீய வார்த்தைகளை நாம் பேசினாலும், அந்த ஒரு வார்த்தையை மறைக்கத் தேவையில்லாமல் வேறு இரண்டு, மூன்று வார்த்தைகளைப் பேச வேண்டியுள்ளது. பொய் உரைத்தல் ஒரு நாளும் மனதிலே நில்லாது. உடனே மறந்து விடுவோம். ஆனால், உண்மை பேசுதல் நம்மை உயிர் உள்ள வரை எந்தச் சூழ்நிலையிலும் பாதுகாக்கும். ஒரு சிறிய பொய்யானது வீட்டை மட்டுமல்ல, திருச்சபையையே கொளுத்தி விடும். இயேசு கிறிஸ்துவினுடைய மணவாட்டியான திருச்சபை பொய் பேசும் திருச்சபையாக இருந்தால் அங்கு சொல்லப்படும் உபதேசங்கள் / அறிவுரைகள் எல்லாம் வீண். பொய்யுரையாத தேவனுடைய வார்த்தை ஒவ்வொன்றும் முற்றிலும் நம்பத்தக்கது. நீதியுள்ள நியாயாதிபதியான கர்த்தர் நம்மிடம் எதிர்பார்ப்பது உண்மையுள்ள ஜீவியம். அப்படி நாம் இருப்போமானால், அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் நீதியின் கிரீடத்தைத் தந்தருளுவார்.

ஏமாற்றுவதும் ஒரு பொய்தான். ஈசாக்கு வயதாகி கண் பார்வை இல்லாமல் இருந்த சூழ்நிலையில் தன் தாயின் (ரெபெக்காள்) தவறான எண்ணத்தால் தன் தகப்பனை (ஈசாக்கு) ஏமாற்றி, **தான் ஏசா** என்று பொய் சொல்லி, இரட்டிப்பான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார் யாக்கோபு. யாக்கோபு ஒரு தடவை மட்டுமே தன் தகப்பனிடம் பொய் சொல்லி ஏமாற்றினார். ஆனால், லாபான், யாக்கோபை பல வகைகளில் பொய் சொல்லி ஏமாற்றினான். ஒன்று மட்டும் நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். நாம் பிறன் ஒருவனுக்கு என்ன தவறான காரியம் செய்கிறோமோ, அதே காரியத்தை நமக்கு திருப்பிச் செய்வதற்கு யாரேனும் இருப்பார்கள் என்று உணர்ந்து கொள்ள வேண்டும். எந்த ஒரு தவறான வார்த்தையோ / செயலோ நம்மைப் பாதாளத்திற்கு கொண்டு செல்லும் என்று மறந்து போக வேண்டாம். மூன்று அனுபவங்களை வேதாகமத்திலிருந்து நாம் பார்க்கலாம்.

1. கீழ்ப்படியாமையினால் வந்த பொய்.
2. ஆஸ்தியினால் வந்த பொய்.
3. தேவனுடைய மக்களுக்காக சொன்ன பொய்.

<u>1. கீழ்ப்படியாமையினால் வந்த பொய்</u>

“...அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு

இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்" (ஆதி. 3 : 6).

தேவனுடைய கரங்களினால் உருவாக்கப்பட்ட முதல் மனிதன் ஆதாம். தேவனோடு ஏதேன் தோட்டத்தில் நடமாடியவர். தேவனோடு பேசியவர். நண்பர் போல் பழகியவர். ஆனால் ஏவாள், ஆதாமின் விலா எலும்பிலிருந்து எடுத்து தேவனால் உருவாக்கப்பட்டவள். சர்ப்பம் பெண்ணிடம் பேசின சமயம் ஆதாமும் கூடவே இருந்ததாக வசனம் ஆதி. 3 : 1-5 வரை கூர்ந்து நிதானித்து வாசித்தால் - நீங்கள், நீங்கள், நீங்கள் என்று எழுதியிருப்பதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

சர்ப்பமானது வஞ்சித்தது பாதி உண்மைதான். ஆனால், மேலே உள்ள வசனத்தைப் பார்த்தால் ஏவாளுக்கு அந்த கனியின் மீது இருந்த ஆவலைப்பற்றி தேவனிடம் பொய் சொல்லி மறைப்பதை அறிய முடிகிறது. முழு பாவத்திற்கும், தேவனுடைய கட்டளையையும், சொல்லையும் மீறும்படியாக தங்களை ஏமாற்றியது சர்ப்பம்தான் என்று பொய் சொல்லி தப்பிக்கப் பார்க்கிறாள். ஆனால், பொய்யுரையாத தேவன் மிகுந்த வேதனையோடு, ஆதாம், ஏவாள், சர்ப்பம் மூன்று பேருக்கும் தண்டனை கொடுக்கிறார். தோட்டத்திலிருந்து அனுப்பி விடுகிறார்.

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான் (நீதி 28 : 13).

சாத்தானின் ஆதிக்கத்தை முறியடித்து மனுக்குலத்தை மீட்கும்படி பெண்ணின் வித்தாகக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தோன்றுவார் / பிறப்பார் என்று முதன் முதலாக மனிதனுக்கு அறிவிக்கப்படுகிறது. ஏமாந்துபோன / பொய் பேசி தப்பித்துக் கொள்ள நினைத்த இந்தப் பெண்ணின் வித்தைக் கொண்டு சர்ப்பமாகிய / சாத்தானாகிய உன்னை முற்றிலும் தோற்கடிப்பேன் என்று தேவன் கூறினார். இந்த நற்செய்தி முதன்முதலாக அறிவிக்கப்பட்ட இடம் தேவனால் உருவாக்கப்பட்ட ஏதேன் தோட்டத்தில்தான்.

பொய் பேசுவது அந்த சூழ்நிலையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக பேசலாம். ஆனால், பொய் பேசினது பேசினது தான். மனிதனின் கண்ணிலிருந்து தப்பித்து விட்டோம் என்று நினைக்கலாம். ஆனால், பொய்யுரையாத தேவனுடைய பார்வையிலிருந்து நாம் ஒளிந்து கொள்ளவும் முடியாது, தப்பிக்கவும் முடியாது. காரணம், நாம் எங்கே இருக்கிறோம் என்பது தேவனுக்குத் தெரியும்.

2. ஆஸ்தியினால் வந்த பொய்

பேதுரு அனனியாவை நோக்கி, ...நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய் சொன்னாய், என்றான் (அப். 5 : 4).

எப்பொழுதும் உண்மை பேச வேண்டுமென்று கர்த்தர் நம்மிடம் எதிர்பார்க்கிறார். தங்கள் தேவைக்கு அதிகமாக இருந்ததை விற்று, சபைமக்களின் தேவைகளுக்கென்று கொடுத்தனர். நிலங்களையும், வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டு வந்து அப்போஸ்தலர் (பேதுரு, யோவான்) பாதத்திலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. யாருக்கும் எந்த விதத்திலும் குறைவாய்க் காணப்படவில்லை.

அப்போஸ்தலரின் காலத்தில் சபையில் எல்லோரும் இரட்சிப்படைந்தவர்களாக இருந்தனர். அதே சமயத்தில் சபையார் எல்லோரும் ஒருமனதோடு (ஒருமனப்பட்டு) இருந்தனர். ஆகையால் அனனியாவும், சப்பீராளும் இரட்சிப்பைப் பெற்றவர்கள் என்பதில் சந்தேகமில்லை. இவர்கள் கணவனும், மனைவியுமாய் இருந்து ஜாடிக்கேற்ற மூடியாய் வாழ்ந்து வந்தனர். இவர்களும் தங்கள் நிலங்களை விற்றனர்.

அனனியாவும், சப்பீராளும் என்ன செய்தனர்?

...கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, (வீட்டிலே மறைத்து வைத்தல்) **ஒரு பங்கைக் கொண்டு வந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான் (அப். 5 : 2).**

அப்போஸ்தலனாகிய பேதுரு அனனியாவிடமும், அவன் மனைவி சப்பீராளிடமும் நிலத்தை விற்று வந்த பணம் இவ்வளவுதானா என்று சாதாரணமாகத் தான் கேட்டார். காரணம், ஒரு பங்கை வஞ்சித்து வைத்திருக்கிறார்கள் என்பதை பரிசுத்த ஆவியானவர் மூலமாக பேதுருவுக்கு ஏற்கெனவே வெளிப்பாடாயிருந்தது. அதை அறியாத கணவன், மனைவி இருவரும் ஒருமனப்பட்டு, ஆம் இவ்வளவுக்குத் தான் விற்றோம் என்றார்கள். ஆவியானவருக்கு விரோதமாகப் பேசுவோமேயானால் அதற்கு மன்னிப்புக் கிடையாது. பரிசுத்த ஆவியானவரிடத்தில் **பொய் சொல்ல** சாத்தானுக்கு உன் இருதயத்தில் எப்படி இடம் கொடுத்தாய்? தேவனிடத்தில் பொய் சொல்ல இப்படிப்பட்ட துணிகரம் உன் உள்ளத்திலே எப்படி வந்தது? என்று கேட்டான்.

மனிதர்களாய் பிறந்த நமக்கு பணத்தின் மீது, பொருளின் மீது ஆசை வருவது இயல்பு. ஆனால், இரட்டை வாழ்க்கை நாம் வாழக்கூடாது. நொண்டி, நொண்டி நடந்தால் வெகு தூரம் வேகமாக நடக்க முடியாததுபோல், தேவனுக்குப் பிரியமில்லாத பாவமான பொய்யை நாம் அடிக்கடி பேசிப் பேசி சேமித்து வைப்போமானால், நறுமணம் வீசும் நம் உள்ளமானது பாழடைந்த மண்டபமாக மாறிவிடும்.

அனனியா, சப்பீராள் இரண்டு பேரும் பேதுருவின் வார்த்தைகளைக் கேட்ட போது கீழே விழுந்து ஜீவனை விட்டனர் (அப். 5 : 5, 10). சாத்தானின் ஏவுதலுக்குக் கீழ்ப்படிந்த காரணத்தினால், இரண்டு பேரும் மரணத்தை சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

நம்முடைய நாவின் துணையோடுதான் பொய் பேசுகிறோம். நம் உடம்பில் உள்ள எல்லா அவயங்களிலும் நாவு ஒன்று மாத்திரமே ஈரமாக எப்போதும் குளிர்ச்சியாக இருக்கும். கர்த்தர் அப்படியொரு அமைப்பை வைத்திருக்கிறார். குளிர்ச்சியான வார்த்தைகளை நாம் பேசுவோமாக. நாவு ஒரு நெருப்பு என்று யாக்கோபு 3 : 6-இல் வாசிக்கிறோம். ஆரோக்கியமுள்ள நாவு ஜீவ விருட்சம் என்று ஞானி, தன் புத்தகமான நீதிமொழிகள் 15:4-இல் கூறுகிறார். பொய் பேச துணைபோகும் நாவைப் போல் இராமல், கர்த்தர் நமக்குத் தரும் ஜீவ விருட்சத்தைப் பெற்றுக்கொள்ள எப்போதும் எந்தச் சூழ்நிலையிலும் உண்மையைப் பேசுவோம், நாடுவோம்; நல்ல போராட்டத்தைப் போராடி, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலே இயேசுவை முகமுகமாய்க் காண, கறை அற்றவர்களாய் எதிர்கொள்ள ஆயத்தமாவோம்.

3. தேவனுடைய மக்களுக்காக சொன்ன பொய்

...அவர்கள் எங்கே போனார்களோ எனக்குத் தெரியாது... (யோசுவா 2 : 5).

மோசேக்கு அடுத்தபடியாக இஸ்ரவேலரை வழிநடத்தி, இடங்களையெல்லாம் பிரித்துக் கொடுத்த தேவ மனிதன் யோசுவா. ஒரு மாபெரும் தலைவர் விட்டுச் சென்ற பொறுப்பை ஏற்று நடத்துவது மிகவும் கடினமானது. தேவன் மீதுள்ள பாசத்தாலும், விசுவாசத்தாலும் இதைத் திறம்படச் செய்தவர் யோசுவா.

எதிரியைப் பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்ள யோசுவா வேவுகாரரை மிகவும் இரகசியமாக அனுப்புகிறார். தேசத்தின் நிலைமையையும், எரிகோவையும் பார்த்து வருமாறு இரண்டு பேரை அனுப்பினார். அவர்கள் ஊருக்குள்ளே போய், ராகாப் ஒரு வேசியாக இருந்த போதிலும், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவளாயிருந்ததால் தேவன் அந்த இரண்டு பேரையும், ராகாபின் வீட்டிற்கு வழி

நடத்தினார். அதற்குக் காரணம் ராகாபின் வீடு அலங்கத்தின் மீது இருந்ததால், எதிரிகள் யாரேனும் வந்தால் தகவல்/செய்தியும் தெளிவாகக் கிடைக்கும். விரைவில் தப்பித்து ஓட முடியும் என்ற காரணத்தினால் அந்த இரண்டு பேரும் ராகாபின் வீட்டிற்குச் சென்றனர்.

யார் இந்த ராகாப்?

உண்மையான தேவன் யாரென்பதை கண்டுபிடிக்க வேண்டும் என்று அதிக வாஞ்சை / தாகம் கொண்ட ஒரு ஆத்துமா. அவள் இஸ்ரவேல் மக்கள் இனத்தைச் சார்ந்தவள் அல்ல. கானானியப் பெண். அக்காலத்தில் அவள் குடியிருந்த நாட்டில் வேசியாக வாழ்வது ஒரு தொழிலாக இருந்தது. யாரும் ராகாபை கட்டாயப்படுத்தி அடிமையாக அவளை ஈடுபடுத்தவில்லை. புறஜாதிப்பெண். தெய்வத்தின் சிந்தனைகள் அதிகம் காணப்பட்டதால் உண்மையான தெய்வத்தைத் தேட ஆரம்பித்தாள். கர்த்தர் செய்த அற்புதங்களையும், அடையாளங்களையும் கேட்டறிந்து, மெய்யான தேவன் யார் என்று கண்டு கொண்டாள். பாவ மக்களாகிய கானானிய மக்களை விட்டு, தேவ மக்களோடு இணைத்துக் கொண்டாள்.

இஸ்ரவேல் புத்திரரில் சிலர் இந்த ராத்திரியிலே வந்திருக்கிறார்கள் என்று எரிகோ பட்டணத்து இராஜாவுக்குச் சொல்லப்பட்டது. உடனே எரிகோவின் ராஜா தன்னுடைய ஆட்களில் சிலரை ராகாபின் வீட்டிற்கு அனுப்பினான். இவர்கள் போய் வேவு பார்க்க வந்தவர்கள் உன் வீட்டிற்குள் இருக்கிறார்கள், அவர்களை வெளியே கொண்டு வா என்று கூறுகிறார்கள்.

ராகாப் கூறிய பதில் என்ன?

ராகாப் அந்த இரண்டு இஸ்ரவேலரையும் கொண்டு போய் ஒளித்து வைத்தாள் (யோசு. 2: 4).

ராகாப் அவர்களைப் பார்த்து உண்மை தான். என்னிடத்தில் வந்திருந்தார்கள். ஆனால், அவர்கள் எங்கிருந்து வந்தவர்கள் என்று **எனக்குத் தெரியாது** என்று **பொய் சொன்னாள்.** இருட்டு வேளையிலே அவர்கள் எங்கு போனார்கள் என்று **எனக்குத் தெரியாது** என்று **பொய் சொன்னாள்** (யோசு. 2 : 4,5).

தன் உயிரை பணயம் வைத்தாள். வேவுகாரர்களை தன் வீட்டில் சணல் தட்டைகளுக்குள் (Stalks of Flax), ஒளித்து வைத்திருப்பதை எரிகோவின் அரசர் அறிந்தால் நிச்சயமாக தன்னையும் தன் குடும்பத்திலுள்ள அனைவரையும் கொடூரமாக சித்திரவதைச் செய்துக் கொலை செய்வான் என்று நன்கு தெரிந்திருந்தும் தேவன் பாதுகாப்பார் என்ற முழு விசுவாசத்தோடு வேவுகாரர்களை தன் இல்லத்தில் ஏற்றுக் கொண்டாள்.

விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக் கொண்டாள் (எபி 11 : 31).

ராகாப் தூதர்களை **வேறு வழியாய்** அனுப்பினாள். கிரியைகளினாலே நீதியுள்ளவளாக்கப்பட்டாள் (யாக். 2 : 25).

...தேவனால் எச்சரிக்கப்பட்டு, சாஸ்திரிகள் வேறு வழியாய்த் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள் (மத். 2 : 12).

நம்முடைய வழியும், நினைவுகளும் வேறு. தேவனுடைய வழியும், நினைவுகளும் வேறு. தம்மை நாடி, தேடி வருபவர்கள் யாராயிருந்தாலும், அவர்களைத் தீயவழியில் நடவாமல், வேறுவழியாய் (நல்ல பாதையில்) செல்லுமாறு நடத்துவதற்கு நம் ஆண்டவர் ஒருவரால் மட்டுமே முடியும்.

பாவ வாழ்க்கையை விட்டு விட்டு, இஸ்ரவேலில் சல்மோன் என்பவரைத் திருமணம் (மத். 1 : 5) செய்துக் கொண்டாள். சிகப்புக் கயிறு பாதுகாப்பிற்கான அடையாளம். தேவனைப் பற்றி யோசு. 2 : 9-11 வசனங்களில் அவள் கூறுவதை

நாம் வாசித்து, வாசித்து சிந்திக்க வேண்டும். தம்முடைய ஜனத்தை ஆபத்திலிருந்துக் காப்பாற்றத் தன் உயிரை துச்சமாக வைத்து, செயல்பட்டதைப் பார்த்த கர்த்தர் தம்முடைய மந்தையில் ராகாபை ஏற்றுக் கொண்டு, தன் மகனாகிய இயேசு பிறந்த வம்சத்தில் ஒரு தாயாக ராகாபை ஏற்படுத்தினார்.

ராகாப் ஒரு கானானியப் பெண்
ரூத் ஒரு மோவாபியப் பெண்
நகோமி ஒரு யூதகுலப் பெண்

சல்மோன், போவாஸ் இருவரும் இஸ்ரவேல் பிரபுக்கள்.

தன் மகனான போவாஸை மோவாபிய வாலிப இளம் விதவையான நகோமியின் மருமகளான ரூத்துக்கு திருமணம் செய்து, வேதாகமத்தில் நீங்காத ஒரு இடத்தைப் பெற்றாள் ராகாப்.

மத்தேயு 15 மற்றும் மாற்கு 7 ஆகிய அதிகாரங்களில் வரும் இரண்டு கானானியப் பெண்களின் கிரியைகளையும் விசுவாசத்தையும் (புறஜாதிப் பெண்கள்) ஆண்டவரே கண்டு அதிசயித்திருக்கிறார். நாமும் விசுவாச வீரர்களாக மாறுவோமாக!

காயீன், ஆதாம், ஏவாள், அனனியா, சப்பீராள் மட்டும் தான் பொய் சொன்னார்கள் என்பதல்ல. ஆபிரகாம் தன் மனைவியான சாராளை சகோதரி என்று சொன்னது உண்மைதான். ஆதி. 20 : 12-இல் பார்தோமானால், அவள் என் சகோதரி என்பது மெய்தான். அவள் என் தகப்பனுக்கு குமாரத்தி, என் தாய்க்கு குமாரத்தி அல்ல. அவள் எனக்கு மனைவியானாள் என்று ஆபிரகாம் கேராரின் ராஜாவான அபிமெலேக்கிடம் கூறினான். மேலும் பார்வோனிடமும் ஆபிரகாம் சொல்லியிருக்கிறார். பாதி உண்மைதான். ஆனால், தனக்கு மனைவியான பின்பு சாராளை சகோதரி என்று சொல்லுவது தகாத காரியம், இப்படிப்பட்ட பொய் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், தேவன் இடைப்பட்டு எந்தவித அசம்பாவிதமும் ஏற்படாமல் காத்துக் கொண்டார்.

பிலாத்தும் பொய்யான தீர்ப்பைக் கூறினான். (லூக். 23 : 16, 22) வசனங்களிலே கீழ்வருமாறு பிலாத்து கூறுகிறான்.

பிலாத்து ஒரு கவர்னர். சிங்காசன மேடையிலே, **நான் இவனைத் தண்டித்து, விடுதலையாக்குவேன்.** என்று இரண்டு முறை கூறினான். கிட்டத்தட்ட நான்கு முறை விடுதலை என்ற வார்த்தை பிலாத்துவின் வாயிலிருந்து வந்தது. ஆனால், அந்த வார்த்தையை அவனால் காப்பாற்ற முடியவில்லை. **பொய் சொல்லுவது ஒரு கவர்னருக்கு அழகல்ல.** ஆண்டவராகிய கிறிஸ்து கல்வாரிப் பாடுகளை சந்தித்தே ஆக வேண்டும் என்பது பிதாவின் திட்டம். வாக்குத்தத்தம் மற்றும் தீர்க்கன்களின் முன்னுரைப்பு எல்லாம் நிறைவேற வேண்டும். ஆகவே, இதை மாற்ற யாராலும் முடியாது. ஆண்டவருக்கு விரோதமாக பொய்யான தீர்ப்பை பிலாத்து கூறியது, மன்னிக்கவே முடியாதது.

பொய்யுரையாத தேவனின் பிள்ளைகளாக நம்மை வேறு பிரித்து வைத்திருக்கும் போது, எந்த சூழ்நிலையிலும் நாம் பொய் பேசக்கூடாது. அது கர்த்தர் வெறுக்கும் வார்த்தை. அப்பா, பிதாவே என்று உரிமையோடு அழைக்கும் நாம், நம்முடைய சுயநலத்திற்காக, தப்பித்துக் கொள்வதற்காக உண்மைக்கு எதிராக பொய்யை பேசவே வேண்டாம். குடும்பத்திலும் சரி, சபையிலும் சரி, உண்மை பேசும் மக்களாக ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்து, கர்த்தரின் மேலான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோமாக!

ஆமென்.

– சகோதரி. பேர்ல் குயில்ராஜா

ஆசிரியர் மடல்

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினால் சத்திய வார்த்தை பத்திரிகையின் வாசகர்களுக்கு எங்கள் அன்பின் வாழ்த்துதலை தெரிவித்துக் கொள்கிறோம்.

"அப்பொழுது நாங்கள் எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களைத் தாழ்த்துகிறதற்கும், எங்களுக்காகவும் எங்கள் பிள்ளைகளுக்காகவும், எங்கள் சகல பொருள்களுக்காகவும் செவ்வையான வழியைத் தேடுகிறதற்கும், நான் அங்கே அந்த அகாவா நதியண்டையிலே உபவாசத்தைக் கூறினேன்" (எஸ்றா 8 : 21).

இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப் போனபின்பு, பாபிலோனிய ராஜாவாகிய நேபுகாத் நேச்சாரால் அழிக்கப்பட்ட தேவாலயம் (பெர்சிய ராஜாவாகிய கோரேசின் நாட்களில்) செருபாபேல் தலைமையில் மீண்டும் கட்டப்பட்டு, பிரதிஷ்டை செய்யப்பட்டது. அதற்குப் பின்பு அர்தசஷ்டா ராஜா அரசாளுகிற காலத்தில், வேத பாரகனாகிய எஸ்றாவின் தலைமையில் இஸ்ரவேல் புத்திரரிலும், ஆசாரியரிலும், லேவியரிலும், பாடகரிலும், வாசல் காவலாளரிலும் சிலர் எருசலேமுக்குப் போனார்கள். பாபிலோன் தேசத்திலிருந்து பொன்னையும், வெள்ளியையும், காணிக்கைகளையும் பெற்றுக் கொண்டு எருசலேமிற்கு புறப்படும்பொழுது அகாவா நதியண்டையிலே இந்த உபவாசத்தைக் கூறினான். மூன்று காரியங்களுக்காக இந்த உபவாசத்தை எஸ்றா கூறினான்.

1. தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்துவதற்காக.

2. நமக்காகவும், நம்முடைய பிள்ளைகளுக்காகவும், கர்த்தர் நமக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களின் பாதுகாப்பிற்காகவும்.

3. செவ்வையான வழியைத் தேடுகிறதற்காகவும்.

தேவனுக்கு முன்பாக நம்மை தாழ்த்துவதே உபவாசத்தின் முதல்படி. நினிவே பட்டணத்து ஜனங்கள் தங்கள் மேல் வரும் நியாயத்தீர்ப்பின் தண்டனைகளிலிருந்து தப்பிக்கொள்ள இராஜா முதற்கொண்டு சிறியோர் வரை இரட்டுத்திக் கொண்டு தங்களைத் தாழ்த்தினார்கள். அதினிமித்தமாக கர்த்தர் அவர்களை அழிக்காதபடிக்கு மனமிரங்கினார். இஸ்ரவேல் இராஜாக்களிலேயே மிகவும் மோசமாக கர்த்தருக்கு விரோதமாய் துணிகரமான பாவங்களைச் செய்தது ஆகாபும், மனாசேயும்தான். ஆனாலும், கர்த்தரிடமிருந்து அவர்களுக்கு விரோதமாக வார்த்தைகள் வந்தபொழுது, கர்த்தருக்கு முன்பாக தங்களை மிகவும் தாழ்த்தி, ஜெபித்ததினிமித்தம் அவர்களுக்கு வருகிற தீங்கிலிருந்து அவர்களை காப்பாற்றினார்.

இரண்டாவதாக, நம்முடைய குடும்பத்திற்காகவும், நமக்காகவும், கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் மற்றும் பூமிக்குரிய ஆசீர்வாதங்களான நிலம், வீடு, வாகனம் மற்றும் வேலைக்காகவும் அதின் பாதுகாப்பிற்காகவும், பிசாசு ஏமாற்றி, அதை அபகரித்துக் கொள்ளாதபடிக்கும், மறைவான கன்னிகளுக்கு தப்பும்படிக்கும் நாம் வாரம் ஒருமுறையாவது உபவாசித்து ஜெபிக்க வேண்டும்.

மூன்றாவதாக, செவ்வையான வழியைத் தேடுவதற்காக உபவாசித்து ஜெபிக்க வேண்டும். ஆங்கில மொழிபெயர்ப்பில் பாதுகாப்பான பயணத்திற்காக என்றிருக்கிறது. எஸ்றா பாபிலோனிலிருந்து பொன், வெள்ளி மற்றும் காணிக்கைகளை எருசலேமிற்கு கொண்டு வரும் வழியில் எதிரிகளிடமிருந்தும், கொள்ளைக்-காரர்களிடமிருந்தும் அதைக் காத்துக் கொள்ள உபவாசமிருந்தான். கர்த்தர் அவன் பிரயாணங்களை வாய்க்கச் செய்தார். எந்தவொரு புதிய காரியத்தைத் தொடங்குவதற்கு முன் உபவாசமிருந்து ஜெபிப்பது நல்லது. மோசே 40

நாள் உபவாசமிருந்து பத்து கற்பனைகளை பெற்றுக் கொண்டார். இயேசு 40 நாள் உபவாசமிருந்துதான் தன்னுடைய ஊழியத்தைத் தொடங்கினார்.

“ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்” (யோவேல் 2 : 12).

IBT ஊழியத்தில், கடந்த செப்டம்பர் மாதம் 7-ஆம் தேதியன்று நாகர்கோவில் குளச்சலிலுள்ள குரும்பானை பெத்தேல் சபையில் IBT-இன் பணித்தள இயக்குநர் திரு. சாமுவேல் ஞானதாஸ் அவர்கள், IBT ஊழிய விளக்கமும், தேவ செய்தியும் கொடுத்தார். இதே மாதம் 14-ஆம் தேதியன்று கோவை, காரமடை, Teachers Colony-யிலுள்ள Church of Christ சபையில் திரு. சாமுவேல் ஞானதாஸ் அவர்கள் IBT ஊழிய விளக்கமும், தேவ செய்தியும் கொடுத்தார். சந்தர்ப்பம் அளித்த இரு சபைகளின் ஆயர்கள் மற்றும் பொறுப்பாளர்கள், பங்குபெற்ற சபை மக்களுக்கு IBT மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறது. இதே மாதம் 20-ஆம் தேதியன்று கோவை IBT மையத்தில் IBT-இன் பொதுக்குழுக் கூட்டமும் (G.B. Meeting), 27-ஆம் தேதியன்று WPT Board Meeting ஆகியன நடைபெற்றன. இதில் அனைத்து உறுப்பினர்களும், தலைவர், செயலர், பொருளர் மற்றும் பணித்தள இயக்குநரும் பங்கு பெற்று, IBT ஊழிய வளர்ச்சிக்கான நல்ல ஆலோசனைகளைக் கூறினார்கள். கடந்த வருடத்திற்கான வரவு செலவு கணக்குகளும், அங்கத்தினர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. நடப்பு நிதி ஆண்டிலும் ஊழியத்தின் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்படவும், திட்டமிட்டபடியே மொழிபெயர்ப்புப் பணிகள் தொய்வின்றி நடைபெறவும் ஜெபியுங்கள்.

சத்திய வார்த்தை பத்திரிகை வாசகர்களின் குடும்பங்கள், பங்காளர்களின் குடும்பங்கள் மற்றும் தாங்குநர்களின் குடும்பங்களைக் கர்த்தர் அபரிமிதமாக ஆசிர்வதித்து வழிநடத்த ஜெபிக்கிறோம்.

கர்த்தரின் பணியில்,
உங்கள் சகோதரன்,
K. ஜெய்சிங்

உலகச் செய்திகள்

★ ஆப்கானிஸ்தானின் மிகப்பெரிய விமான தளமான பக்ராம் தளத்தை அமெரிக்கா கட்டுப்பாட்டுக்குள் மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று அதிபர் டொனால்ட் டிரம்ப் வலியுறுத்தியுள்ளார். இதனால் பரபரப்பான சூழ்நிலை உருவாகியுள்ளது.

★ அமெரிக்காவின் மேரி இ. பிரன்கோ, ஃபிரட் ராமஸ்டெல் மற்றும் ஜப்பானின் ஷிமோன் சககுச்சி ஆகிய மூவர், நிகழாண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசை பெறுவதற்கும், அமெரிக்காவின் ஜான் கிளார்க், மிஷெல் எச். டெவரே மற்றும் ஜான் எம். மார்டினில் ஆகிய மூவர் இயற்பியலுக்கான நோபல் பரிசை பெறுவதற்கும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

★ பாகிஸ்தானுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கும் வெளிநாடுகள் பட்டியலில் சவூதி அரேபியா முதலிடத்தில் உள்ளது. ஆண்டுக்கு 4% சதவீத வட்டி என்ற மிகக் குறைந்த விகிதத்தில் பாகிஸ்தானுக்கு அந்நாடு கடன் வழங்கி வருகிறது.

★ அமெரிக்காவில் ஆளும் குடியரசுக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான சார்லி கிர்க், கடந்த மாதம் 10-ஆம் தேதி பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற போது மர்ம நபரால் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதனால் அந்நாட்டு மக்கள் மிகவும் துயரமான சூழ்நிலையில் உள்ளனர். அநேகர் தங்களது வருத்தங்களை தெரிவித்து வருகின்றனர்.

IBT ஊழியத்தின் மூலமாக இதுவரை வெளியிடப்பட்ட புத்தகங்கள்

தமிழ்நாடு :

சௌராஷ்ட்ரா மொழியில் பரிசுத்த வேதாகமம், புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள், 4 நற்செய்திப் புத்தகங்கள், சிறுவர் வேதாகமம் மற்றும் பாடல் புத்தகம்.

படுகா மொழியில் பரிசுத்த வேதாகமம், புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள் மற்றும் 4 நற்செய்திப் புத்தகங்கள்.

தோடா மொழியில் புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள் மற்றும் மாற்கு நற்செய்தி நூல்.

பனியா மொழியில் புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள், மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய 3 நற்செய்திப் புத்தகங்கள்.

கோத்தா மொழியில் மாற்கு நற்செய்தி நூல்.

இருளா (குஞ்சப்பனை) மொழியில் புதிய ஏற்பாடு மற்றும் மத்தேயு, மாற்கு, லூக்கா நற்செய்தி நூல்கள்.

இருளா (வெள்ளியங்காடு) மொழியில் புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள் மற்றும் மாற்கு, லூக்கா நற்செய்தி நூல்கள்.

கர்நாடகா :

எரவா மொழியில் மாற்கு மற்றும் லூக்கா நற்செய்தி நூல்கள்.

கொடவாதக் மொழியில் மாற்கு மற்றும் யோவான் நற்செய்திப் புத்தகங்கள்.

வாக்ரி மொழியில் மத்தேயு மற்றும் மாற்கு நற்செய்திப் புத்தகங்கள்.

லம்பானி மொழியில் மாற்கு நற்செய்தி நூல்.

சித்திக் மொழியில் மாற்கு நற்செய்தி நூல்.

போவி மொழியில் புதிய ஏற்பாடு மத்தேயு & மாற்கு நற்செய்தி நூல்கள்.

ஜெனுகுரும்பா மொழியில் மாற்கு நற்செய்தி நூல்.

ராஜஸ்தான் :

ஹடோத்தி மொழியில் மத்தேயு நற்செய்தி நூல்.

மார்வாடி மொழியில் மாற்கு நற்செய்தி நூல்.

துந்தானி மொழியில் மத்தேயு நற்செய்தி நூல்.

வாக்ரி மொழியில் 4 நற்செய்திப் புத்தகங்கள்.

டிங்கால் மொழியில் மத்தேயு & மாற்கு நற்செய்தி நூல்கள்.

மேவாரி மொழியில் மத்தேயு நற்செய்தி நூல்.

உத்தரப்பிரதேசம் :

போஜ்புரி மொழியில் புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள், மாற்கு, யோவான் நற்செய்தி நூல்கள், சிறுவர் வேதாகமம் மற்றும் பாடல் புத்தகம்.

சட்டிஷ்கார் :

சட்டிஷ்காரி மொழியில் புதிய ஏற்பாடு மற்றும் மாற்கு, யோவான் நற்செய்தி நூல்கள்.

குடுக் மொழியில் மத்தேயு, யோவான் நற்செய்தி நூல்கள்.

ஹல்பி மொழியில் மத்தேயு, யோவான் நற்செய்தி நூல்கள்.

ஒடிஷா :

தெஷியா மொழியில் புதிய ஏற்பாடு, மாற்கு, லூக்கா, யோவான் நற்செய்தி நூல்கள் மற்றும் சிறுவர் வேதாகமம்.

மிர்கான் மொழியில் புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள், மத்தேயு, மாற்கு, லூக்கா நற்செய்தி நூல்கள் மற்றும் சிறுவர் வேதாகமம்.

போடோ பொர்ஜா மொழியில் புதிய ஏற்பாடு மற்றும் லூக்கா நற்செய்தி நூல்.

கலகாண்டியா மொழியில் புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள், மாற்கு நற்செய்தி நூல் மற்றும் சிறுவர் வேதாகமம்.

சம்பல்புரி மொழியில் புதிய ஏற்பாடு, மாற்கு, யோவான் நற்செய்தி நூல்கள் மற்றும் சிறுவர் வேதாகமம்.

முண்டாரி மொழியில் புதிய ஏற்பாடு மற்றும் மாற்கு, யோவான் நற்செய்தி நூல்கள்.

கடபா மொழியில் மாற்கு நற்செய்தி நூல். சிறுவர் வேதாகமம் மற்றும் பாடல் புத்தகம்.

கோயா மொழியில் மத்தேயு நற்செய்தி நூல்.

கோண்டா பொர்ஜா மொழியில் மாற்கு நற்செய்தி நூல்.

குவி மொழியில் லூக்கா நற்செய்தி நூல், சிறுவர் வேதாகமம் மற்றும் பாடல் புத்தகம்.

சோரா மொழியில் மத்தேயு, மாற்கு நற்செய்தி நூல்கள், சிறுவர் வேதாகமம் மற்றும் பாடல் புத்தகம்.

மத்தியப் பிரதேசம் :

பாகேலி மொழியில் மத்தேயு, மாற்கு, யோவான் நற்செய்தி நூல்கள்.

பண்டேலி மொழியில் மாற்கு நற்செய்தி நூல்.

ஒலிப்பதிவு செய்யப்பட்ட கருவிகள் (Audio Devices)

தமிழ்நாடு :

1. தோடா மொழியில் புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள் ஒலிப்பதிவு செய்யப்பட்ட கருவி (Audio Device).
2. இருளா (வெள்ளியங்காடு) மொழியில் புதிய ஏற்பாடு ஒலிப்பதிவு செய்யப்பட்ட கருவி (Audio Device).
3. படுகா மொழியில் புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள் ஒலிப்பதிவு செய்யப்பட்ட கருவி (Audio Device) இவ்வருடம் ஜுன் மாதம் வெளியிடப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

ஒடிஷா :

1. தெஷியா மொழியில் புதிய ஏற்பாடு ஒலிப்பதிவு செய்யப்பட்ட கருவி (Audio Device).

வாசகர்கள் கவனத்திற்கு (திருத்தம்)

கடந்த அக்டோபர் மாத “சத்திய வார்த்தை” இதழின் 3–வது பக்கத்தின் 4–வது பத்தி, 4&5 வரிகளில் ஏழு அப்பங்கள் என்பதற்கு பதில் ஒரு அப்பம் என்ற அச்சுப்பிழைக்காக வருந்துகிறோம்.

எமது தரிசனமும், எமது பணியும்

எமது தரிசனம் : “இதுவரை மொழி பெயர்க்கப்படாத அனைத்து இந்திய மொழிகளிலும் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டு ஒவ்வொரு சமூகமும் தங்களது தாய்மொழியில் கடவுளுடைய வார்த்தைகளை கிடைக்கும்படி செய்வதே”

எமது பணி : கடவுளுடைய வார்த்தையை, இதுவரை வேதாகமம் இல்லாத அனைத்து இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து, அச்சிட்டு, போதிப்பது. மொழிவாரியாக இந்தியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் / மிஷனெரிகளை அனுப்புதல் மற்றும் ஒவ்வொரு மொழிக்கும் “ஒரு வேதாகம மொழிபெயர்ப்பாளர் குழுவை” அமைத்து அனுப்புதல்.

ஒரு முக்கிய வேண்டுகோள்

தேவை

★ கோவை IBT கட்டிடத்திலுள்ள Meeting Hall-இல் கூட்டங்கள் நடத்தப்படும் போது, சப்தம் வெளியே சென்று, அருகாமையிலுள்ள குடியிருப்புகளுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படாவண்ணம் Meeting Hall-ற்கு Sound Proof System மற்றும் தகுந்த மாற்றங்கள் செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, இப்பணிகளுக்கு ரூ. 4,50,000/– முதல் ரூ. 5,00,000/– வரை செலவு ஆகும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இத்தொகையை சந்திக்க தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

★ சென்னையில் பணிபுரியும் முன்னேற்றப் பணியாளருக்கு 1 இருசக்கர வாகனம் தேவைப்படுகின்றது. தற்போதுள்ள பழைய வாகனத்தின் செலவு அதிகமாக வருவதால் புதிய வாகனம் கொடுக்க வேண்டியுள்ளது. இதற்கு ஆகும் செலவு ரூ. 1,10,000/–. இதற்கு தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

★ கோவை IBT அலுவலகத்தில் தற்போது பயன்பாட்டிலுள்ள புதிய Website பணிகள் செய்யப்படும் ஒரு கணினி அடிக்கடி பழுது ஏற்படுவதால், உடனடியாக புதிய (Updated) கணினி தேவைப்படுகிறது. இதன் விலை ரூ. 78,000/–. இதற்கு தாங்குநர் கிடைக்க ஜெபியுங்கள்.

பணித்தளச் செய்திகள்

மொழிபெயர்ப்பாளர் : சகோ. கடாமண்டல்
மொழி : சோரா
பணித்தளம் : பரலக்காமண்டி (ஒடிஷா)

கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதாக!

கடந்த மாதத்தில் மொழிபெயர்ப்புப் பணியில் புதிய ஏற்பாடு புத்தகத்தில் எபேசியர், பிலிப்பியர், கொலோசேயர், I தெசலோனிக்கேயர், II தெசலோனிக்கேயர், I தீமோத்தேயு, II தீமோத்தேயு, தீத்து, பிலேமோன், எபிரேயர், யாக்கோபு, I பேதுரு அதிகாரம் 5 : 1-ஆம் வசனம் முதல் 14-ஆம் வசனம் முடிய கணினியில் கீ-இன் செய்யப்பட்டவைகளில் தலைப்புகள், வார்த்தைகள், கமா, முற்றுப்புள்ளி, வாக்கிய அமைப்புகள் சரிபார்ப்பு செய்யப்பட்டன. இவைகளில் கடினமான வார்த்தைகளையும், வாக்கிய அமைப்புகளையும் குறித்து வைத்து, மறு சரிபார்ப்பில் சரி செய்யப்படும்.

ஞாயிறு அன்று ஆராதனையில் கலந்து கொண்டு, ஊழியர் திரு. பயனுமண்டல் அவர்களைச் சந்தித்து அவருடைய ஊழியத்திற்காக ஜெபித்தேன். இவர் மூலமாக அநேகர் கர்த்தருக்குள் வழிநடத்தப்படுகிறார்கள். மேலும் வேதாகம வகுப்பு நடத்தும் தலைவர்களாக திரு. பிலேமோன், திரு. லபன்யா ஆகியோரையும் சந்தித்து, அவர்களின் ஐக்கியத்தை கர்த்தர் ஆசீர்வதிக்க ஜெபித்தேன். இவர்கள் மூலமாக வேதத்தில் மறைந்துள்ள அரிய காரியங்கள் அநேருக்கு அறியப்பட்டும், ஆவிக்குள்ளான வழி நடத்துதலும் கிடைக்கிறது. என் மொழிபெயர்ப்பு ஊழியம் மற்றும் என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

முன்னேற்றப் பணியாளர் : சகோ. சாம் எபிநேசர்
பணித்தளம் : மேட்டுப்பாளையம்/கோயம்புத்தூர் (தமிழ்நாடு)

கர்த்தரின் பெரிதான கிருபையால் என் முன்னேற்றப் பணியில் கர்த்தர் துணை நின்று, பல தாங்குநர்களை, காரமடை, Teachers Colony, மேட்டுப்பாளையம் மற்றும் சிறுமுகை ஆகிய இடங்களில் சந்தித்து, IBT ஊழியத்திற்கென்று காணிக்கையைப் பெற்று, அவர்களுக்காக ஜெபித்து வந்தேன். சகோ. ராபர்ட் மற்றும் சகோ. கிதியோன் இருவரும் வெவ்வேறு நாட்களில் என்னோடு வந்து தாங்குநர்களின் வீடுகளை அடையாளம் காட்டினார்கள். 22.8.2025 முதல் IBT அலுவலகப் பணிகளையும், சத்திய வார்த்தைப் பத்திரிகை பணிகளையும் செய்ய கர்த்தர் அருள் புரிந்தார். என் முன்னேற்றப் பணியில் பல புதிய தாங்குநர்களைச் சந்திக்கவும், IBT முன்னேற்றக் கூட்டங்கள் நடத்த சபை ஆயர்களைச் சந்திக்கவும் கர்த்தர் வழி வாசல்களைத் திறக்க ஜெபியுங்கள்.

மொழிபெயர்ப்பாளர் : சகோ. அல்டாப் ஹுசைன்
மொழி : டிங்கால்
பணித்தளம் : டோங்க் (ராஜஸ்தான்)

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

கடந்த மாதம் என் மொழிபெயர்ப்புப் பணியில், பழைய ஏற்பாடு பாகத்தில் ஆதியாகமம் அதிகாரம் 36 : 1-ஆம் வசனம் முதல் அதி. 50 : 26-ஆம் வசனம் வரையிலும், யாத்திராகமம் அதி. 1: 1முதல் அதி. 7 : 25-ஆம் வசனம் வரையிலும், மொழிபெயர்ப்புச் செய்தேன். புதிய ஏற்பாடு மற்றும் சங்கீதம், நீதிமொழிகள் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. சரிபார்ப்புச் செய்யப்பட வேண்டும். சரிபார்ப்பு முடிந்த பின்னரே பேஜ் செட்டிங் பணி ஆரம்பிக்கப்பட வேண்டும். என் பணியில் கடினமாக இருக்கும் நேரங்களில் கர்த்தரிடம் ஜெபித்து, அவரின் ஆலோசனைப்படியாக நடந்து வருகிறேன். என்

மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

<u>முன்னேற்றப் பணியாளர் : சகோ. ரெஜி ஜெல்லிப்பாரா</u>
<u>பணித்தளம் : திருச்சூர் (கேரளா)</u>

கடந்த மாதத்தில் என் முன்னேற்றப் பணியை நல்ல முறையில் செய்ய கர்த்தர் கிருபை புரிந்தார். மிகுந்த மழையின் காரணமாக, முன்னேற்றப் பணி செய்வதற்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டது. கிராமங்களுக்கிடையே முல்லக்கரா, செம்புத்ரா, நெல்லங்கரா, பரவத்தானி, குட்டநல்லூர், அம்பல்லூர், ஒலாரிக்கரா, அஸ்வினி ஆஸ்பத்திரி, பூங்கன்னம், ராய்ரோத், கல்லாடிக்கோடு, புத்தூர், ஐயந்தோல், புல்லங்கண்டம், கன்னாரா, பட்டிக்காடு, தோனிப்பாரா, அரங்கள்ளூ, பைரவம், சக்தம், குரா, அதானி, வெட்டிக்கால் ஆகிய இடங்களுக்குச் சென்று, தாங்குநர்களைச் சந்தித்து, காணிக்கைப் பெற்று அவர்களுக்காக ஜெபித்து வந்தேன். IBT ஊழியத்திற்காக புதிய இடத்தையும் தெரிவு செய்துள்ளேன். இரண்டு ஆலயங்களுக்குச் சென்று, கர்த்தரின் வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது. IBT-இன் பிரதிநிதி ஆலப்பியிலுள்ள திரு. மோஹன்ஜான் அவர்கள் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். மேலும் தாங்குநர்கள் ஜேம்ஸ், பேன்சி, டெய்சி Teacher, இவர்களும் சுகவீனத்துடன் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரின் பூரண சுகத்திற்காகவும், என் முன்னேற்றப் பணி மற்றும் என் குடும்பத்திற்காகவும் ஜெபியுங்கள்.

<u>மிஷனெரி : சகோ. கங்காதர் கபாசி</u>
<u>பணித்தளம் : பாப்பன்பள்ளி (ஒடிஷா)</u>

கர்த்தரின் நாமம் துதிக்கப்படுவதாக!

கடந்த மாதத்தில் சிறுவர் இல்லத்தில் தங்கியுள்ள சிறுவர்களுக்கு தினமும் ஜெபத்தை நடத்தினேன். அவர்களின் அன்றாட ஒழுங்குமுறைகளான படிக்கும் நேரம், சாப்பிடும் நேரம், குளியல் நேரம், மாலையில் விளையாட்டு நேரம் போன்றவற்றிலும் தோட்டத்தைப் பராமரிக்கும் தோட்ட வேலையிலும் அவர்களுக்கு ஆலோசனையுடன் பயிற்றுவிக்கிறேன். இவர்கள் பள்ளிகளுக்குச் சென்ற பின்பு, நாங்கள் 4 மிஷனெரிகளும் ஒன்றாக ஜெபிப்போம். இதன் பின்பு நானும் திரு. சுவிடன் அவர்களும் இல்லத்திற்குத் தேவையான பொருட்கள் வாங்குவதற்காக மார்க்கெட் செல்வோம். இங்குள்ள சிறுவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுப்பதோடு, நல்ல பழக்க, வழக்கங்களையும் கற்றுக் கொடுக்கிறோம். இவர்கள் மூலமாக இவர்கள் குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்படவும், இவர்கள் கர்த்தரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளவும் ஜெபிப்போம்.

<u>மொழிபெயர்ப்பாளர் : சகோ. ஜெயந்த்பானி கிரகி</u>
<u>மொழி : சம்பல்புரி</u>
<u>பணித்தளம் : காலியாபாலி – பர்கர் (ஒடிஷா)</u>

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

புதிய ஏற்பாடு புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. பழைய ஏற்பாட்டில் 10 புத்தகங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதில் சங்கீதம் நீதிமொழிகள் மொழிபெயர்ப்பு முடிக்கப்பட்டு பாராடெக்ஸ்ட்-இல் கீ-இன் பணி நடந்து வருகிறது. சங்கீதம் மொழிபெயர்ப்பில் பல சிக்கல்கள் உள்ளன. உதாரணமாக சங்கீதம் 1-இல் வரும் துன்மார்க்கர், பாவிகள், பரியாசக்காரர் போன்ற சொற்களுக்கு சரியான அர்த்தம் தரும் சொற்கள் தெரிவு செய்வது மிகவும் சிரமமான ஒன்றாகும். ஆனாலும் கர்த்தரின் கிருபையால் முயன்றவரை ஒத்துவரும் சொற்கள் போடப்படுகின்றன. கடந்த மாதத்தில் மொழிபெயர்ப்புப் பணியில் சங்கீதம் 79 முதல் 135 வரை முடிக்கப்பட்டுள்ளன. என் மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் ஒரு வெற்றியாளரா? தோல்வியாளரா? நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்

உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலோ அல்லது நீங்கள் வேலை செய்யும் பணித்தளத்திலோ, ஒரு பெரிய பிரச்சனை திடீரென்று உருவாகிவிட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் வேலை பார்க்கும் தொழிற்சாலையில், அலுவலகத்தில் அல்லது, உங்கள் குடும்பத்தில் அல்லது, நீங்கள் வாழும் சமுதாயத்தில் ஒரு பிரச்சனை தலைதூக்கும் போது, நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? என்ன அணுகுமுறையை கடைபிடிக்கிறீர்கள் என்பது கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. கவனமாக வாசித்து - இந்த இரண்டு குழுக்களில் நீங்கள் எந்த குழுவைச் சேர்ந்தவர் என்பதை நீங்களேத் தீர்மானியுங்கள். நீங்கள் எந்த அணுகுமுறையை கையாளுகிறீர்கள் என்பது தான் நீங்கள் ஒரு வெற்றியாளரா? அல்லது தோல்வியாளரா? என்பதை தீர்மானிக்கிறது.

1. பிரச்சனை என்ன என்பதை எப்படியாவது நான் கண்டுபிடிப்பேன் – வெற்றியாளர்.

என்ன பிரச்சனை என்பது கடவுளுக்குக் கூட தெரியாது – தோல்வியாளர் பதில்.

2. தான் ஒரு தவறு இழைத்துவிட்டால், “ஆம் இது என்னுடைய தவறு” என்று தனது தவறை தைரியமாக ஒத்துக்கொள்பவர் வெற்றியாளர்.

ஆனால் “இது என்னுடைய தவறு அல்ல என்று கழுவிய மீனில் நழுவுகிறவர்” தோல்வியாளர்.

3. வெற்றி பெறுபவர் - பிரச்சனையின் ஊடாக கடந்து போவார்.

தோல்வியாளர் அந்த பிரச்சனையிலிருந்து நழுவிக் கொண்டு வேறு குறுக்கு வழியைத் தேடுவார்.

4. வெற்றியாளர் - “நான் இதைப் பொறுப்பெடுக்கிறேன்”, நான் இதைச் செய்வேன், “இதற்கு நான் பொறுப்பு” என்று கூறுவார். ஆனால் தோல்வியாளர், “இதை செய்ய முயற்சிப்பேன் முடிந்த அளவிற்கு செய்வேன்” என்று கூறி நழுவப் பார்ப்பார். இவர்களை “நழுப்பினி” என்று அழைக்கலாம்.

5. வெற்றியாளர் - “நான் தற்சமயம் செய்யும் வேலை எனக்கு திருப்திதான். ஆனால் இதே வேலையை இன்னும் திறமையாக செய்ய என்ன வழிமுறை என்பதை ஆராய வேண்டும்” என்று சொல்லுவார்.

தோல்வியாளரோ, “நான் ஒன்றும் அந்த ஆளைப் போல (ஆயக்காரன் போல) அவ்வளவு மோசமானவன் அல்ல” என்று தன்னை மற்றவர்களோடு ஒப்பிட்டு ஒப்பாரி வைப்பார்கள்.

6. வெற்றியாளர்கள் மற்றவர்களிடத்தில் உள்ள நல்ல காரியங்களை கற்றுக் கொள்ள முயலுவார்கள். ஆனால், தோல்வியாளர்களோ மற்றவர்களிடத்தில் என்ன குறைகளோ அதையே பட்டியல் போட்டு படம் போட்டுக் காண்பிப்பதிலேயே குறியாக இருப்பார்கள்.

7. வெற்றியாளர்கள் இந்த முறையைக் காட்டிலும் வேறு ஏதாவது Better Method - சிறப்பான முறை இருக்கிறதா - என்று ஆராய்ந்து வாழ்க்கையில் முன்னேற முயற்சிப்பார்கள். ஆனால், அதற்கு மாறாக தோல்வியாளர்கள் எல்லோரும் இதைத்தான் செய்கிறார்கள் - என்று பல்லவி பாடுவார்கள்.

நீங்கள் ஒரு வெற்றியாளரா? தோல்வியாளரா? உங்கள் வாழ்க்கையில் நீங்கள் கடைபிடிக்கும் கண்ணோட்டத்தை, அணுகுமுறையை தயவு செய்து மாற்றுங்கள். அல்லது மறுபரிசீலனை செய்யுங்கள். நல்லதையே யோசியுங்கள்: நல்லதையே செய்யுங்கள். அதையே எதிர்மறையாக யோசிக்காதீர்கள். எல்லாவற்றிலும் நல்லதே நடக்கும் என்று Positive-ஆக யோசியுங்கள். நீங்களும் ஒரு வெற்றியாளராக நிச்சயமாக மாறுவீர்கள்.

Road to success is always under Construction.

Things do not happen; you have to make things happen.

Successful people don’t do different things but they do the things differently.

“உயிருள்ள உதாரணங்கள்” என்ற
புத்தகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

1.	வானத்தின் வாசல்	ரூ. 70/-	9.	Word of Life (ஆங்கிலம்)	ரூ. 100/-
2.	வானத்தின் மன்னா	ரூ. 70/-	10.	Word of Life (மலையாளம்)	ரூ. 100/-
3.	பயப்படாதிருங்கள்	ரூ. 70/-	11.	Introduction to the Books of the Bible	ரூ. 70/-
4.	வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம்	ரூ. 60/-	12.	Defeat the Despair (ஆங்கிலம்)	ரூ. 100/-
5.	உயிருள்ள உதாரணங்கள்	ரூ. 60/-	13.	Seeds for the Good Soil (ஆங்கிலம்)	ரூ. 120/-
6.	பாருக்குள் பரலோகம்	ரூ. 100/-	14.	சத்திய வார்த்தையின் முத்துக்கள்	ரூ. 120/-
7.	விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி	ரூ. 100/-	15.	இதய கீதங்கள் (பாடல் புத்தகம்)	ரூ. 60/-
8.	தேவ சத்தம்	ரூ. 100/-			

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் – செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

IBT ஊழியர்களுக்கு கிறிஸ்துமஸ் வெகுமதி

நமது ஊழியத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் மற்றும் கோயா சிறுவர் இல்லத்தில் தங்கியுள்ள பிள்ளைகளுக்கும் கிறிஸ்துமஸ் வெகுமதி வழங்க ரூ. 5 லட்சம் நிதி தேவைப்படுகிறது. இது சம்பந்தமாக உங்களில் பலருக்கு IBT பிரதிநிதிகள், முன்னேற்றப் பணியாளர்கள் மூலமாக கிறிஸ்துமஸ் கவர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கிறிஸ்துமஸ் “கவர்” பெறாதவர்கள் உங்களது காணிக்கையை ‘கிறிஸ்துமஸ் வெகுமதி’ என்று குறிப்பிட்டு தலைமை அலுவலகத்திற்கு தபால் மூலமாகவும் அல்லது கீழே உள்ள QR Code-ஐ Scan செய்தும் உங்கள் கிறிஸ்துமஸ் வெகுமதியை அனுப்பி, ஊழியர்களை ஊக்குவிக்கும்படியாக உங்களை அன்புடன் வேண்டிக் கொள்கிறோம். கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

- பொருளாளர்

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

1. STATE BANK OF INDIA

A/c. No. : 30008395600
Name : Indian Bible Translators
Branch Code : 7231
Branch : Peelamedu
IFS Code : SBIN0007231

2. INDIAN BANK

A/c. No. : 475742259
Name : Indian Bible Translators
Branch Code : S107
Branch : Peelamedu
IFS Code : IDIB000S107

SCAN & PAY

Merchant Name : Indian Bible Translators
UPI ID : INDIANBIBLE@SBI

BHIM | UPI

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

துதியுங்கள்! ஜெபியுங்கள்!!

1. லம்பானி மொழியிலுள்ள புதிய ஏற்பாடு முதல்முறையாக Red Letter மற்றும் Colour Map-இலும் அச்சிடப்படுவதற்காக கர்த்தரைத் துதியுங்கள். இதன் ஒரு பிரதியின் அச்சிடும் விலை ரூ.350/-. 500 பிரதிகள் அச்சிட ரூ. 1,75,000/- ஆகிறது. இதற்கு தாங்குநர்கள் கிடைக்கவும், கர்த்தருக்கு சித்தமானால் இவ்வருடத்தில் வெளியிடவும் ஜெபியுங்கள்.

2. அடுத்த வருடத்திற்குரிய காலண்டர்கள் அச்சிடப்பட்டு முடிந்து பிரதிநிதிகள், முன்னேற்றப் பணியாளர்களுக்கு அனுப்பப்பட்டதற்காகக் கர்த்தரைத் துதியுங்கள். IBT-இன் அனைத்துப் பங்காளர்கள் மற்றும் தாங்குநர்களுக்கு விடுபடாமல் காலண்டர்கள் விநியோகிக்கப்படவும், காணிக்கையை அலுவலகத்திற்கு நேரிடையாக அனுப்பும் தாங்குநர்களுக்கு அலுவலகத்திலிருந்து உரிய நேரத்தில் காலண்டர்கள் அனுப்பப்படவும் ஜெபியுங்கள்.

3. கடந்த செப்டம்பர் மாதம் 5 மாநிலங்களிலிருந்து கோவை IBT அலுவலகத்திற்கு வந்திருந்த 12 மொழிபெயர்ப்பாளர்களின் பணிகள் பயனுள்ளதாயிருந்ததற்காக கர்த்தரைத் துதியுங்கள். இம்மாதம் (நவம்பர் 2025) 17-ஆம் தேதியிலிருந்து மொழியெர்ப்புப் பணிகளைச் செய்ய கோவை வரவிருக்கும் 5 மொழிபெயர்ப்பாளர்களின் பணிகளும் தடையின்றி செய்யப்பட ஜெபியுங்கள்.

4. தாமதமாகிக் கொண்டிருக்கும் கடபா, கோண்டா பொர்ஜா புதிய ஏற்பாடு இறுதிப் பணிகள் துரிதமாக முடிக்கப்படவும், விரைவில் அச்சிட கொடுக்கப்பட ஜெபியுங்கள்.

5. உலகமெங்கும் நடைபெறும் மிஷனெரிப் பணிகள் தடையின்றி துரிதமாக நடத்தப்படவும், இதுவரை நற்செய்தி அறிவிக்கப்படாத இடங்களுக்கு, எவ்வழியிலாவது, நற்செய்தி சென்றடையவும், இயேசு கிறிஸ்துவின் அன்பை அனைத்து தரப்பு மக்களும் அறிந்து கொள்ளவும் ஜெபியுங்கள்.

SEND ALL YOUR CONTRIBUTIONS

Cheques / DD / M.O. to

INDIAN BIBLE TRANSLATORS

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 4520143
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
Web : www.ibtword.com

சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.
வருட சந்தா ரூபாய். 100/-

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :

WORD PUBLISHERS TRUST

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.

Editor & Published by On behalf of: **Mr. K. JAISINGH**
WORD PUBLISHERS TRUST
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.

Printed by: **Mr. C.K. VENKATESH**
Chandra Prabha Press
113-118, V.H. Road, CBE-1.

வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவைப் புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/-ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கி மூலமாகவும், கீழேயுள்ள **QR Code**-ஐ **SCAN** செய்து, கைப்பேசி மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை எங்களுக்கு அனுப்பலாம். அனுப்பப்பட்ட விவரத்தை உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்.

தொடர்பு எண். 90470 57414.

BANK DETAILS

CENTRAL BANK OF INDIA

A/c. No.	:	1630413107
Name	:	Word Publishers Trust
Branch	:	Kalapatti
IFS Code	:	CBINO282057

SCAN & PAY

Address :

WORD PUBLISHERS TRUST
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.

SATHTHIYA VAARTHAI - TAMIL

Date of Publishing : 2nd & 3rd November 2025
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)

RNI No. 82166